மாண்புமிகு பேரவைத் தலைவர்; It depends upon your interpretation. நீங்கள் தருகிற விளக்கம் தனிப்பட்டது.

திரு. அ. ரகுமான்கான்: தமிழ்நாட்டிலுள்ள எல்லா கல்லூரிகளையும் பொறுத்தது அந்த மசோதா. ஆனால் நான் கொடுத்து இருப்பது எஸ்.ஐ.ஈ.டி. பிரச்னைப் பற்றி. அதிலே தனியாக பேசினால்தான் அரசாங்கத்தின் அணுகு முறை எப்படி இருந்தது? எப்படி இருக்கிறது என்பதைப் பற்றி தெரிந்து கொள்ளமுடியும்.

3. அரசினர் சட்ட முன்வடிவுகள்

(அ) அண்ணாமலைப் பல்கலைக் கழகச் சட்டமுன்வடிவு, 1982.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: தலைவர் அவர்களே, 1982ஆம் ஆண்டு அண்ணாமலைப் பல்கலைக் கழகச் சட்ட முன்வடிவைப் பேரவை முன் அறிமுகம் செய்ய அனுமதி கோருகிறேன்.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றுப்பெற்று, அனுமதி வழங்கப் பெற்றது.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: இச் சட்ட முன்வடிவை பேரவை முன் அறிமுகம் செய்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இச் சட்ட முன்வடிவு அறிமுகம் செய்யப் பெற்றிருக்கிறது.

(முற்பகல் 10-20)

(ஆ) எதிர்பாராச் செலவு நிதி (மூன்றாவது திருத்த) சட்ட முன்வடிவு, 1982.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன்:

தமிழ்நாடு 1982 ஆம் ஆண்டு எதிர்பாராச் செலவு நிதி (மூன்றாவது திருத்த) சட்ட முன்வடிவு*(சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 35/1982) ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப் பெறவேண்டும்.

திரு. அ. ரகுமான்கான்: மாண்புமிகு மன்றத்தினுடைய தலைவர் அவர்களே, இங்கே நம்முடைய நிதியமைச்சர் அவர்களால் கொண்டுவரப்பட்டிருக்கின்ற இந்தச் சட்டமுன் வடிவானது சத்துணவுத் திட்டத்திற்கு எதிர்பாராச் செலவு நிதியில் 50 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டது செலவாகிவிட்டது என்பதால் மீண்டும் 50 கோடி ரூபாய் அனுமதிக்கப்படவேண்டும் என்று அமைச்சர் அவர்கள் இந்தச் சட்டவடிவைக் கொண்டு வந்திருக்கிறார்கள். இந்தக் கூட்டத் தொடருக்கு முன்பாக நிதியமைச்சர் அவர்கள் நிதிநிலை அறிக்கையை இந்த மன்றத்திலே சமர்ப்பித்தபோதும் அதைப்பற்றி விவாதம் இங்கே நடைபெற்றபோதும் அவர்கள் இதைப்பற்றி குறிப்பிட்டிருக்

* * 1982 செப்டம்பர் 6 ஆம் தேதியிட்ட தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப் பெற்றுள்ளது.